DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.1334/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பாண்டிமீனாள் | க-பெ | ரவிக்குமார் |
| ஊர்: | : | பெரியக்கோட்டை | | |
| வயது: | : | 43/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **08.01.2026**

**எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் பெரியக்கோட்டையில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அசா1 எனது மகள். தற்சமயம் வழக்கு குறித்து ஆஜர் எதிரியுடன் சமரசம் செய்துகொண்டு சமாதான மனு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியும். அசா1 சம்பவ சமயத்தில் 13.11.2019 அன்று காலை 11.00 மணிக்கு அழகப்பா அறிவியல் கல்லூரியில் அலுவலக உதவியாளராக தற்காலிகமாக பணி செய்து வந்ததாகவும் அன்றைய தினம் அவர் அறிவியல் ஆய்வகத்தில் அறையை சுத்தம் செய்து கொண்டிருந்தபோது நபர் ஒருவர் அவருக்கு பின்புறமாக வந்து பாலியல் தொல்லை கொடுத்ததாகவும் அவர் திரும்பி பார்ப்பதற்குள் அவர் அங்கிருந்து திரும்பி சென்று விட்டார் என்றும் ஆஜர் எதிரியானவர் அங்கிருந்ததால் அவர் தான் மேற்படி பாலியல் தொல்லை கொடுத்திருப்பார் என்று நினைத்து மேற்படி விபரத்தை என்னிடம் சொன்னார். பின்னர் அழகப்பாபுரம் காவல்நிலையத்தில் நாங்கள் புகார் அளித்தோம். மற்றபடி எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க விசாரணைக்கு ஒத்துழைத்தேன்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 13.11.2019 அன்று காலை 11.00 மணிக்கு அசா1 காரைக்குடி அழகப்பா அறிவியல் கல்லூரியின் அறிவியல் ஆய்வகத்தில் அறையை சுத்தம் செய்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரியானவர் அவருக்கு பின்புறமாக வந்து பாலியல் தொல்லை கொடுத்ததாகவும் பின்னர் இது தொடர்பாக அழகப்பா பல்கலைக்கழத்தின் நிர்வாகத்திடம் புகார் மனு கொடுத்ததாகவும் அதன்அடிப்படையில் அவர்கள் விசாரணை செய்ததாகவும் பின்னர் இது தொடர்பாக 25.12.2019 அன்று அழகப்பாபுரம் காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி புகார் மனு கொடுத்த போது தான் உடன் இருந்ததாகவும் இந்த விபரத்தை அவருடன் பணி புரிந்த சண்முகப்பிரியா, ஜெயகாந்தன் மற்றும் சில நபர்களிடம் சொன்னதாகவும் வழக்கு சம்பந்தமாக ஆஜர் எதிரி மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் மனு அளித்துவிட்டு தற்போது எதிரியானவர் தனக்கு தெரிந்தவர் என்பதால் அவருடன் சமரசம் செய்து கொண்டு உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.08 17:15:29 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.1334/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஸ்ரீமதி | த-பெ | ரவிக்குமார் |
| ஊர்: | : | பெரியக்கோட்டை | | |
| வயது: | : | 25/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டில் உள்ளேன் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.01.2026

**எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் பெரியக்கோட்டையில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். தற்சமயம் வழக்கு குறித்து ஆஜர் எதிரியுடம் சமரசம் செய்துகொண்டு சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன். **சமாதான மனுவில் உள்ள கையொப்பம் அசாஆ 1. புகாரில் உள்ள கையொப்பம் அசாஆ 2**. சம்பவ சமயத்தில் 13.11.2019 அன்று காலை 11.00 மணிக்கு அழகப்பா அறிவியல் கல்லூரியில் அலுவலக உதவியாளராக தற்காலிகமாக பணி செய்து வந்தேன். அன்றைய தினம் நான் அறிவியல் ஆய்வகத்தில் அறையை சுத்தம் செய்து கொண்டிருந்தபோது நபர் ஒருவர் எனக்கு பின்புறமாக வந்து பாலியல் தொல்லை கொடுத்தார். நான் திரும்பி பார்ப்பதற்குள் அவர் அங்கிருந்து திரும்பி சென்று விட்டார். ஆஜர் எதிரியானவர் அங்கிருந்ததால் அவர் தான் மேற்படி பாலியல் தொல்லை கொடுத்திருப்பார் என்று நினைத்து அழகப்பாபுரம் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். மற்றபடி எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க விசாரணைக்கு ஒத்துழைத்தேன்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 13.11.2019 அன்று காலை 11.00 மணிக்கு காரைக்குடி அழகப்பா அறிவியல் கல்லூரியின் அறிவியல் ஆய்வகத்தில் அறையை சுத்தம் செய்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரியானவர் தனக்கு பின்புறமாக வந்து பாலியல் தொல்லை கொடுத்ததாகவும் பின்னர் இது தொடர்பாக அழகப்பா பல்கலைக்கழத்தின் நிர்வாகத்திடம் புகார் மனு கொடுத்ததாகவும் அதன்அடிப்படையில் அவர்கள் விசாரணை செய்ததாகவும் பின்னர் இது தொடர்பாக 25.12.2019 அன்று அழகப்பாபுரம் காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி புகார் மனு கொடுத்ததாகவும் இந்த விபரத்தை தன்னுடன் பணி புரிந்த சண்முகப்பிரியா, ஜெயகாந்தன் மற்றும் சில நபர்களிடம் சொன்னதாகவும் வழக்கு சம்பந்தமாக ஆஜர் எதிரி மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் மனு அளித்துவிட்டு தற்போது எதிரியானவர் தனக்கு தெரிந்தவர் என்பதால் அவருடன் சமரசம் செய்து கொண்டு உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.08 17:15:38 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.